# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:40** **தேதி:-14.05.2015**

**FORUM கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

13.05.2015 அன்று புதுடெல்லியில் நமது அகில இந்திய FORUM கூட்டம் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, FNTO, BTEU, BSNL MS, SNATTA, BSNLOA, ATM மற்றும் BTU சங்கங்களின் பொது செயலாளர்கள்/பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். FORUM அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி வந்திருந்த அனைவரையும் வரவேற்று ஆய்படு பொருட்களை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். இந்தக் கூட்டத்தின் முடிவுகள் பின்வருமாறு:-

1) ஏப்ரல் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றுள்ள இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அனைத்து BSNL ஊழியர்களையும் இந்தக் கூட்டம் மனமார பாராட்டியது. இந்த வேலை நிறுத்தத்தினை வெற்றிகரமாக்கிய அனைத்து சங்கங்களையும் இந்தக் கூட்டம் பாராட்டியது. இந்த வேலை நிறுத்தத்தில் 100% பங்கேற்பினை ஊழியர்கள் செலுத்தியது என்பது என்ன விலை கொடுத்தாலும் BSNLஐ புத்தாக்கம் செய்வோம் என்கிற ஊழியர்களின் உறுதிப்பாட்டை வெளிக் காட்டியுள்ளது என்ற உணர்வை இந்தக் கூட்டம் பகிர்ந்து கொள்கிறது.

2) இந்த வேலை நிறுத்தம் அரசாங்கத்திடம் நல்லதொரு தாக்கத்தை உருவாக்கியுள்ளது என்பதை FORUM தலைவர்கள் மற்றும் DOT செயலருக்கும் இடையே 01.05.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தை தெளிவு படுத்தியுள்ளது. DOTயின் ஒட்டு மொத்த அதிகாரிகள் குழுவும் FORUM தலைவர்களின் கருத்துக்களை அக்கறையுடன் கவனித்ததோடு முக்கியமான பிரச்சனைகள் மீது உறுதியான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

3) 01.05.2015 நடைபெற்ற கூட்டத்தில் DOT செயலாளர் உறுதி அளித்துள்ளவற்றை குறித்த காலத்தில் அமுலாக்கபடுவதை உறுதி செய்ய தொடர் கவனிப்பும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்த கூட்டம் முடிவு செய்துள்ளது.

அதே சமயம், இந்த பிரச்சனைகள் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப் படவில்லையெனில், ஒரு குறுகிய காலத்தில் அறிவிப்பு கொடுக்கப்பட்டால் கூட, நாடு தழுவிய அளவில் அரசாங்கத்தின் மீது தேவையான அழுத்தத்தை கொடுக்கும் வகையிலான நடவடிக்கைகளில் இறங்கிட ஊழியர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.

4) **அமைப்பாளர் பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்கிற தோழர் VAN நம்பூதிரியின் வேண்டுகோளை இந்தக் கூட்டம் ஏற்றுக் கொண்டது. FORUMத்தின் புதிய அமைப்பாளராக BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களை ஏகமனதாக தேர்ந்தெடுத்துள்ளது.** FORUMத்திற்கு ஒரு பொருளாளர் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய அவசியத்தை உணர்ந்த அந்தக் கூட்டம் அது தொடர்பாக அடுத்தக் கூட்டத்தில் அதனை முடிவு செய்யப்படும் என முடிவெடுத்துள்ளது.

5) FORUMத்தின் அடுத்த கூட்டம் BSNL MS அலுவலகத்தில் 25.05.2015 அன்று மாலை 3 மணிக்கு நடைபெறும்.

**இது வரை FORUM அமைப்பாளராக திறம்பட செயல்பட்ட அருமைத் தோழர் VANநம்பூதிரியின் பணியை தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. அவரது மிகச்சிறப்பான பணிக்கு தமிழ் மாநில சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது.**

**நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களின் புதிய பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் மனமார வாழ்த்துகிறது.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**